
# தெட்சணகைலாசம்
# திருக்கோணேஸ்வரம்



இ. சோமசுந்தரம் J.P
ஆசிரியர்

வெளியீடு 20.04.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

நிரைகழலரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர் நீறணித் திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடலோத நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுகின்றோம்.

கோணநாத பெருமானின்
பாவநாச தீர்த்தம்
எமது பாவங்களை அழித்து
அழகான வாழ்விற்கு வழிவகுக்கும் தீர்த்தமாகும்.


அந் நாளில் ஆண்டு தோறும்
அவரின் பெருமை கூறும் வெளியீடுகளை
வெளியிடுவதன் மூலம் இரத்தினச் சுருக்கமாக
அவர் பெருமை பேசும் வெளியீடுகளை
ஆண்டு தோறும் வெளியிடும்
"ரேணுகாமில்" ஸ்தாபனத்தை பாராட்டுகின்றோம்.
எமது வாழ்த்துக்களை சமர்ப்பிக்கின்றோம்.

இந்திரா
நினைவு மன்றம்.

50/6A, மத்தியவீதி,
8வது ஒழுங்கை,
உவர்மலை,
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கோணேசப் பெருமானின் தீர்த்தம்

சைவ பெருமக்களின்
விடிவிற்கான பெருமான்
கோணேஸ்வரப் பெருமானே
என்பதை உணருவோமாக.
இன்றைய நாளில் வெளிவரும் வெளியீடு
ஊடாக எமது சைவ உலகம் நன்மை
பெறவேண்டுமென கோணேசப்பெருமான்
திருப்பாதம் வணங்கி எனது வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கின்றேன்.

சோ. சிவரூபனின் இம்முயற்சி தொடர்ந்தும்
பல்லாண்டு வெளிவந்து
வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

இ. மகேந்திரராசா
உரிமையாளர்
பிருந்தாவணம் கல்யாண மண்டபம்,
பெருந்தெரு,
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

திருக்கோணமலையில் பிறப்பது அவர்கள் செய்து கொண்ட நற் பலன் என்பது அனுபவரீதியாக உணர்ந்து கொண்டவர்களின் உயர் கருத்தாகும்.

திருக்கோணமலையில் பிறந்தவன் தனது மண்ணின் மாண்பினை அறியாமல் வாழமுடியாது. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஞாணக்கண்ணால் கண்டு மகிழ்ந்து பாடிய பதிகமாகும்.

இத்தகைய பெருமை மிகுந்த தமிழர்தம் ஆதி வழிபாட்டு இல்லிடம் திருக்கோணேஸ்வரம். எமது எதிர்கால சிறார்களின் நாளாந்த வாழ்வினில் தேவாரம் திருப்பதிகங்களையும் ஊட்டி வளர்த்திடுதல் வேண்டும்.

3312 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோணேச பெருமானின் வரலாறுகளை எடுத்துக்கூறி எதிர்கால சமுதாயத்தை உருவாக்க வேண்டியது அனைத்து தாய், தந்தையர்களின் கடமையாகும்.

சோ.சிவரூபன்
உரிமையாளர்,
ரேணுகாமில்.

இல.206,
மத்தியவீதி,
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் உரை

திருகோணமலை திருக்கோணேஸ்வரப் பெருமானது அருளால் ஆண்டுதோறும் பாவநாச தீர்த்த நன்னாளில் திருகோணமலையில் பரபலமான ரேணுகாமில் ஸ்தாபனத்தாரின் நூல் வெளியீடு வெளியிடப்படுவது வழமையான நிகழ்வாகும்.

1983ம் ஆண்டுக்குப் பின் இப்பணி நடைபெறவில்லை. 2014ம் ஆண்டு இப் பணி திருக்கோணநாதப் பெருமானின் திருவருள் துணை கொண்டு மேலும் ஆரம்பமாகியது.

01. 1975ம் ஆண்டு தேவாரத் திருப்பதிகம்
02. 1976ம் ஆண்டு தீர்த்த நன்னாள்
03. 1977ம் ஆண்டு அருளமுதம்
04. 1978ம் ஆண்டு மண் சுமந்த ஈசன்
05. 1979ம் ஆண்டு பாதமலர்
06. 1980ம் ஆண்டு சிலம்பொலி
07. 1981ம் ஆண்டு திருமேனி
08. 1982ம் ஆண்டு அருட்கழல்
09. 1983ம் ஆண்டு திருநகர் உலா
10. 2014ம் ஆண்டு தித்திக்கும் திருப்பதிகம்

ஆரம்ப வெளியீட்டாளர்களாக திரு. சி. மகேந்திரராஜா (உரிமையாளர், பிருந்தாவன கல்யாண மண்டபம்), இ.சோமசுந்தரம் அவர்களும் அதனைத் தொடர்ந்து சோ. சிவரூபன் (ரேணுகாமில் உரிமையாளர்) 2014ம் ஆண்டு முதலாக இப் பணியை தொடருகின்றார். என்பதை மகிழ்வுடன் கூற விரும்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தும் இப் பணியைத் தொடருவதற்கு அருள்வேண்டி அவன் அருளால் அவன்தாழ் வணங்குவோம்.

வரலாறுகளை மறைப்பதிலும் சரித்திரங்களை தமது தேவைக்கு ஏற்புடையதாக மாற்றி எழுதுவதிலும் உலகினில் முன்னனித் திலகமாய் திகலுவது இலங்கை நாடு என்பதை அனைவரும் அறிவார்கள்.

திருக்கோணேஸ்வரத்தின் அருள் ஆட்சிக் காலத்தை வெளிபடுத்த 1656ம் ஆண்டு ஆதர். சீ. கிளார்க் மற்றும் மைக்கல் வில்சன் ஆகிய ஆழ்கடல் ஆய்வாளர்கள் திருக்கோணேஸ்வரத்திற்கு அண்மையில் உள்ள கடலை ஆய்வு செய்து கடலடியில் மூழ்கிய பண்டைய கோயிலின் பகுதிகளை புகைப்படம் எடுத்து வெளியிட்டனர். ஆய்வின் விடை திருகோணமலை சைவ தமிழ் மக்களுடையது என்ற சரித்திர உண்மையை வெளிப்படுத்திவிடும் என்ற அச்சம் காரணமாக சக்தி மிக்கவர்களால் அம்முயற்சி தடுக்கப்பட்டதாக நம்மவர்கள் கவலையுடன் ஆதி நாட்களில் கூறியுள்ளார்கள்.

தமிழர்களில் தாமே எல்லாம் அறிந்த முற்போக்குவாதிகள் என புதிய உலகம் இதுவெனக் கூறிக்கொண்டு தமிழர் தம் கலாச்சார விழுமியங்களுக்கு நேர் மாறாக உடை அணிந்து கோயிலுக்கு வருவதும் சமய நெறி நின்று ஒழுக வேண்டும் என்ற வழிவகைகளை மீறி தமது அறிவை இறை சக்தியைவிட உயர் சக்தி என்ற ஆணவ மிடுக்கோடு எமது பாரம்பரிய சைவ நெறி மிகுந்த தமிழர் கலாச்சார வாழ்வு முறையினை அழிக்கும் நடவடிக்கைகளில் வெற்றி கொண்டு வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய வெற்றிகளை அவர்கள் அடைவதற்கு சைவ அறிஞர் பெருமக்களும், ஆலய குருமார்களும் மௌனமாக இருப்பதே காரணமாகும்.

சைவ சமய குரவர்களின் வழிகாட்டல்களை வெளிப்படுத்தி தமிழர் தம் நெறி சைவ நெறி என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

தொன்மை மிகுந்தது எமது வழிபாடும் கலாச்சாரமும் என்பதையும் சிவ வழிபாட்டின் உயர் தன்மை தமிழர்களது வழிபாடு என்ற உண்மையையும் உலகம் அறியவேண்டும். சைவ அறிஞர்கள் தமது வாழ்வினில் இதனை சாதிக்க முன்வர வேண்டும் என்று பணிவுடன் வேண்டுகின்றோம்.

திருக்கோணமலைக்கு பெருமை சேர்ப்பது திருக்கோணேஸ்வரம். தமிழர்களின் ஒரே கடவுள் திருக்கோணேஸ்வரம் என்பதை வையகம் அனைத்திலும் உள்ள சைவ தமிழ் பெருமக்கள் ஏற்றுக்கொள்வார்கள். தமது கடவுள் "சிவனே" என உறுதி செய்து அதன் வழி ஒழுகுவார்களாயின் நெறி நின்ற வாழ்வாக வாழ்வு அமையும்.

அவன் பாதத்தில் சரணாகதியடைந்தால்
வாழ்வினில் வெற்றி நிச்சயம்

இ. சோமசுந்தரம் J.P
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பெருவாழ்வு காண்போம்.

இறைவன் ஒன்றே என்று இரு.
அதுவே கோணேசர் என்று இரு.
தமிழர் தம் கடவுள் சிவன் என்று இரு.
அதுவே எம் பெருமான் என்று இரு.
தமிழ் கொண்டு வணங்குவது என்று இரு.
அதுவே சமய குரவர்கள் தேவாரம் என்று இரு

உலகின் முழு முதற் கடவுள் நம் திருக்கோணேசர் என்ற பெருமானே என்றிருப்போம்.
ஓம் நமசிவாய சிவாயநம
இமைப் பொழுதும் எம் நெஞ்சில்
ஓம் நமசிவாய சிவாயநம என்றிருப்போம்.
நீண்ட பெருவாழ்வு வந்தடையும்.

சிவவதனா நவேந்திரராசா
நிர்வாக அலுவலர்
சுதேச வைத்திய திணைக்களம்,
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழம் பெரும் பூமி

இலங்கை வாழ் தமிழ் மக்களதும் இந்து சமயத்தினதும் பழம்பெரும் பொக்கிஷமாகத் திருக்கோணமலை மாவட்டம் விளங்குகின்றது. இலங்கையின் வடகிழக்குக் கரையில் தென்னமரவாடி முதல் தெற்கே வெருகல் வரையும் இம்மாவட்டம் நீண்டுள்ளது. வடக்கே முல்லைத்தீவும் மேற்கே அநுராதபுரமும் தெற்கே பொலநறுவை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களும் கிழக்கே இந்துமாகடலும் திருகோணமலை மாவட்டத்தின் எல்லைகளாயுள்ளன. இயற்கைத்துறைமுகமும், நிலாவெளிக் கடற்கரையும் இம்மாவட்டத்திற்கு எழில் சேர்ப்பவையாகவும், பெருமை தருபவையாகவும் பலர் எண்ணுகின்றனர்.

அதைவிட வரலாற்றுத் தொன்மைமிக்க இந்துத் திருக்கோயில்கள் தரும் சிறப்பு காலத்தை வென்றது. சுமார் 2550 ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் கரையொதுங்கிய விஜயனுடன் வந்த உபதிஸ்ஸன் என்ற பிராமணண் சென்று வழிபட்ட ஐந்து சிவாலயங்களில் ஒன்றான கோணேஸ்வரம் இம்மாவட்டத்திலேயே உள்ளது. கி.மு. 237 ஆம் ஆண்டில் புத்தரின் போதனை இலங்கையில் புகுத்தப்படுவதற்கு முன்பே அதற்கும் பல நூற்றாண்டுகளுக்கும் முன்பே திருக்கோணேஸ்வரம் என்ற சிவாலயம் திருகோணமலையில் இருந்தமையை புத்ததுறவிகளால் எழுதப்பட்ட மகாவம்சமே உறுதிப்படுத்தியுள்ளது.

தெட்சணாகைலாசம் என்று போற்றப்படும்
திருக்கோணேஸ்வரம் இராமாயணகாலம்
அதாவது வரலாற்றிற்கு முற்பட்ட இதிகாச காலத்தில்
சிறப்புடன் விளங்கிய சிவாலயம் என்று கூறப்பட்டுள்ளது.
இராமாயண காலம் இன்றைக்கு ஆறாயிரம்
ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கொள்ளப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டை வரலாற்றுச் செய்திகளை உள்வாங்கிய திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் 7ஆம் நூற்றாண்டில் "நிரைகழலரவம்" என்று தொடங்கும் தேவாராப் பதிகத்தை பாடியிருப்பதன் மூலம் குறிப்பிட்ட தேவாரத் திருப்பதிகமானது செந்தமிழும், சிவநெறியும் சிறப்புடன் விளங்கிய திருகோணமலையின் வரலாற்றுப் பதிவாகவும் விளங்குகின்றது.

வரலாற்று காலத்திற்கு முற்பட்ட கடற்கோளால் பண்டைய கோணேஸ்வரக் கோயில் கடலில் மூழ்கிவிட்டதாகவும் அதனை நினைவிற் கொள்ளுமுகமாகவே கடலை நோக்கி வழிபாடு செய்யும் வழக்கம் நிழ்வதாகவும் கூறப்படுகின்றது.

இதனை உறுதிப்படுத்துவது போன்று 1956 ஆம் ஆண்டளவில் ஆதர். சீ.கிளார்க் மற்றும் மைக்வில்சன் ஆகிய ஆழ்கடல் ஆய்வாளர்கள் திருக்கோணேஸ்வரத்திற்கு அண்மையிலுள்ள கடலை ஆய்வு செய்து அங்கு கடலடியில் மூழ்கியுள்ள பண்டைய கோயிலின் பகுதிகளை புகைப்படம் எடுத்து வெளியிட்டனர். ஆனால், அவர்களது ஆய்வு முனைப்புகள் தொடர்வதை, பண்டைய வரலாற்றை வெளிபடுத்தும் ஆய்வு முயற்சிகள் வெளிவருவதை விரும்பாத சக்திகளால் தடைகளேற்படுத்தப் பட்டமையால் குறிப்பிட்ட ஆழ்கடல் ஆய்வில் ஈடுபட இலங்கை வந்த ஆதர்.சீ. கிளார்க் விண்வெளியை ஆய்வு செய்ய முற்பட்டமை வரலாற்றுப் பதிவாக அமைந்துவிட்டது.

1624 ஆம் ஆண்டு போத்துக்கேயரால் திருக்கோணேஸ்வரத் திருக்கோயில் சிதைத்தழிக்கப்பட்டது.
அப்போது ஆலயத்திலிருந்த கல்வெட்டொன்று பிரதி செய்யப்பட்டு போர்த்துக்கேய தளபதியால் போர்த்துகல் அரசனுக்கு அனுப்பப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலே ''மனுராசா அல்லது மாணிக்கராசா என்னும் மன்னன் இலங்கையாண்டான். அவன் கி.மு 1300 ஆம் ஆண்டு கோணேசர் கோயில் கட்டினான்'' என்று அஜுடா நூல் நிலையச் சுவடி 'கொன்கு விஸ்ரா' பக்கம் 51 இல் உள்ளதாகப் பண்டிதர் சி. வடிவேலு தனது திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள் என்ற நூலிலே குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது.

கி.மு 1300 ஆண்டுகளுக்கு முன் அதாவது இன்றைக்கு 3312 ஆண்டுகளுக்கு முன் இலங்கையை மனுராசா அல்லது மாணிக்கராசா என்ற தமிழ் மன்னன் ஆட்சி செய்தான். கோணேசர் கோயிலும் 3312 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது என்ற வரலாற்றுச் செய்தி போர்த்துக்கல் நாட்டின் நூல் நிலையத்தில் உள்ளது என்பது தமிழர்களதும், இந்துக்களதும் தொன்மையான இருப்பை உறுதிப்படுத்தும் வரலாற்றுச் சான்றாகவுள்ளது.

விஜயனின் வரவுடன் இலங்கையின் அரசவம்சம் தொடங்கியது என்பது மேற்படி சான்றின் மூலம் பொய்யாகிவிட்டது. என்பது ஆய்வுக்குரியது. விஜயன் வருவதற்கு முன்பே புத்தபெருமான் அவதரிப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மாணிக்கராசா என்ற தமிழ் அரசன் இலங்கையை ஆட்சி செய்தான். திருக்கோணேஸ்வரத் திருத்தலத்தில் திருப்பணி செய்தான் என்பதை போர்த்துக்கேய நாட்டின் நூல் நிலையத்தில் உள்ள பதிவு வெளிப்படுத்துகின்றது. என்று கூறலாம்.

5ஆம் நூற்றாண்டில் குளக்கோட்டு மன்னனால் திருக்கோணேஸ்வர திருப்பணிகள் மேற் கொள்ளப்பட்டமையும் கோணேசர் கோயிலைப் பரிபாலனம் செய்யச் சட்டதிட்டங்கள் ஏற்படுத்தியமையும் கோணேசர் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கல்வெட்டில் கூறப்பட்ட விடயங்கள் இன்றும் பிரதி செய்யப்பட்டு பேணப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பண்டைய சிறப்புப் பெற்ற கோணேஸ்வரத் திருக்கோயில் 1624 இல் போர்த்துக்கேயரால் சிதைக்கப்பட்டு சூறையாடப்பட்டு பொலிவிழந்தது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் மீளமைக்கும் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டது. இன்று படிப்படியாகப் பண்டைய வரலாற்றுப் பெருமையை நிலைநாட்டும் படியாக திருக்கோணேஸ்வரம் மீள் எழுச்சிபெற்று வருகின்றது. மறைந்திருந்த சூரியன் தன் ஒளி வீசி புத்துணர்வுடன் புதுப்பொலிவுடன் உதிப்பது போன்று கோணேசப் பெருமானும் பிரகாசத்துடன் வெளிப்படுகின்றார். என்று கூறலாம்.

திருகோணமலை மாவட்டத்தின் வட எல்லையான தென்னைமரவாடி தொடக்கம் தெற்கு நோக்கியுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை நோக்குவோம். தென்னைமரவாடிக் கிராமத்தில் கருங்கற்களாவன சிவாலயமொன்று சிதைந்த நிலையில் காணப்படுகின்றது. கோயிலின் இடிபாடுகளும், சிதைந்த திருவுருவங்களும் .இங்கு காணப்படுகின்றன. 1965இல் தொல்பொருள் ஆய்வாளர்கள் இப்பகுதியில் ஆய்வு செய்த போது ஒரு தங்கப் பதக்கம் கண்டெடுக்கப்பட்டது..

வட்டவடிவான அப்பதக்கத்தின் மத்தியிலே நந்தியின்
உருவமும் அதன் இருபக்கங்களளிலும் குத்து விளக்குகள்
இரண்டும் மேல்பக்கம் இரு சாமரைகளும்
பொறிக்கப்பட்டிருந்தன. கீழ் பக்கத்தில் 'மகேஸ்வர பூமி
ஸ்ரீபதிக்கிராமம், பிராமணர்களுக்குத் தானம்
கொடுக்கப்பட்டது
என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பதக்கம் தொல்பொருள் ஆய்வாளர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதால் அது தொல்பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் என்று நம்பப்படுகின்றது. சிவலிங்களும், சிவன், அம்பாள், விநாயகர், திருவுருவங்களும் இங்கு காணப்படுகின்றன. பாரம்பரிய இந்துக் கிராமமான தென்னைமரவாடியில் பிரசித்தி பெற்ற பிள்ளையார் கோயில் சிறப்புடன் விளங்குகின்றது.

தென்னைமரவாடியிலிருந்து தெற்கு நோக்கி வரும் போது திரியாய் என்ற பழந்தமிழ்க் கிராமத்தில் வரத விநாயகர் கோயில் அடுத்து குச்சவெளியில் சித்திவிநாயகர் கோயிலும் உள்ளன. தொடர்ந்து தெற்கு நோக்கி வரும் போது கும்புறுப்பிட்டியில் அருள்மிகு விநாயகர் கோயிலும், நிலாவெளியில் சித்தி விநாயகர் கோயிலும், சாம்பல் தீவில் வடலியம்பதிப் பிள்ளையார் கோயிலும் பிரசித்தி பெற்றவையாயுள்ளன.

கும்புறுப்பிட்டிக்கும் சாம்பல் தீவுக்குமிடையில் உள்ள நிலாவெளியில் இராஜராஜசோழனால் கட்டப்பட்ட நாதனார் கோயில் உள்ளது. திருமலை நகருக்கு வடக்காகவுள்ளது. கன்னியா இராவணன் தனது தாயின் அந்திமக் கடமைகளைச் செய்த இடமாகக் கன்னியா குறிப்பிடப்படுவதன் மூலம் கன்னியாவின் பழமை காட்டப்படுகின்றது. அத்துடன் இந்துக்களின் இருப்பு வரலாற்றிற்கு முற்பட்ட இதிகாச காலத்திலிருந்து வெளிப்படுத்தப்படுகிறது. அங்குள்ள ஏழு வெந்நீரூற்றுக் கிணறுகளும் திருகோணமலைக்கு எழில் சேர்ப்பவையாயுள்ளன.

தம்பலகாமத்திலுள்ள ஆதிகோணேசர் கோயில் கி.மு 1300 ஆம் ஆண்டில் ஆட்சி செய்த மனுராசா காலத்தில் சிறப்புடன் விளங்கியமை மூலம் வரலாற்றுப் பெருமை வெளிப்படுகின்றது. இத்திருக் கோயிலுக்கு கி.பி 5 ஆம் நூற்றாண்டில் குளக்கோட்டு மன்னன் திருப்பணி செய்துள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேசர் கோயில் கல்வெட்டில் கோயில் திருப்பணிக்கு வழங்கப்பட்ட மானியங்கள், நிபந்தங்கள் மற்றும் நிர்வாகக் கட்டளைகள் யாவும் குறிக்கப்பட்டுள்ளன. இன்றும் இந்நிர்வாகக் கட்டளைகளின் படியே ஆதிகோணேசர் ஆலய நடைமுறைகள் பேணப்பட்டு வருகின்றன.

மகாவலி கங்கையை அண்மித்துள்ள திருக்கரசையம் பதி என்னுமிடத்தில் அகத்தியர் தாபித்த சிவன் கோயில் உள்ளது. அகத்திய முனிவரால் சிவலிங்கம் தாபிக்கப்பட்டு பூசிக்கப்பட்ட தலமாக இச்சிவாலயம் கொள்ளப்படுகின்றது. இன்று சிதைந்த நிலையில் காணப்படும் சிவாலய வளவில் சிவலிங்கம், நந்தி, பலிபீடம், முருகன், முதலிய திருவுருவங்களும், பண்டைய கோயில் வாசற் கற்கள், அபிஷேக வாசனைத் திரவியங்கள் அரைக்கும் முக்கூட்டுக்கல், படிக்கற்கள், மற்றும் தூண்கள் என்பனவும் இங்கு கிடைக்கப்பெற்றுள்ளன. மகாவலிக்கங்கை கரையில் இந்துக்களின் பண்டைய இருப்பைப் பறைசாற்றும் சான்றாக அகத்தியர் தாபனம் விளங்குகின்றது.

திருக்கோணமலைக் குடாவின் தெற்கேயுள்ள சம்பூர் இந்துக்களின் பாரம்பரிய இருப்பிடமாகும். என்பதை அங்குள்ள ஶ்ரீபத்திரகாளியம்மன் கோயில் வெளிப்படுத்துகின்றது. அறுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைச் சம்பூர் பத்திரகாளியம்மன் கோயில் கொண்டுள்ளது. 11ஆம் நூற்றாண்டில் முதலாம் இராஜராஜசோழன் காலத்திலும் இவ்வாயம் இங்கிருந்தமைக்கான வரலாறு உள்ளது.

கந்தளாயிலுள்ள பழமை வாய்ந்த
சிவன் கோயிலுக்கு 5 ஆம் நூற்றாண்டில் இராஜராஜ
சோழனும் கி பி 1010 இல் முதலாம்
இராஜேந்திர சோழனும் திருப்பணி செய்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைவடைந்த நிலையிலுள்ள இப்பண்டைய சிவாலயத்தில் இரு சிவலிங்கங்களும், இரு ஆவுடையார்களும், சிவன் பார்வதி சிலைகளின் சிதைந்த பாகங்களும், பீடங்களும் தந்தியும் காணப்படுகின்றன. அவற்றுடன் படிக்கற்கள், நிலைகள் ஆசனக்கற்கள் என்பனவும் இங்கு கிடைக்கப்பெற்றுள்ளன. இவை பண்டைய சிவாலயத்தின் சிறப்பின் சின்னங்களாயுள்ளன.

1977 இல் கந்தளாய் பட்டின சபையால் வடிகாலமைப்பதற்காக நிலத்தை அகழ்ந்த போது வெண்கலச் சிலையும் பூசை மணியும் கிடைத்துள்ளன.

நிலத்தை அகழ்ந்த போது கிடைக்கப்பெற்ற சிவலிங்கம் இன்று கந்தளாய் சிவன் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்தின் தெற்குப்பகுதியிலுள்ள கங்குவேலி சிவன் கோயில் மல்லிகைத்தீவு சிவன் கோயில், கிளிவெட்டி முத்துமாரியம்மன் கோயில், இலங்கைத்துறை செம்பக நாச்சியார் கோயில், சேனையூர் நாகதம்பிரான் கோயில், சீனக்குடா கிண்ணியா, தம்பலகாமம், கன்னியா, கந்தளாய், ஆகிய இடங்களிலுள்ள பழமை வாய்ந்த பிள்ளையார் கோயில்களுட்பட பல சிறப்புமிகு இந்துக் கோயில்கள் இம் மாவட்டத்தில் பரவலாகக் காணப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் தெற்கெல்லையில் வெருகல் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. வெருகலம்பதி சித்திரவேலாயுத சுவாமி கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம், மூன்றையும் கொண்ட இக் கோயில் உபயகதிர்காமம் என்றும் குறிப்பிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவேனியின் வம்சத்தவர்கள் இங்கு வேல் வைத்து வழிப்பட்டதாகக் கர்ணபரம்பரைக் கதையொன்று உள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் பாரிய அளவில் பல்வேறு திருப்பணிகளை ஆற்றிய 5 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த குளக்கோட்டு மன்னன் இத்திருக்கோயிலிலும், திருப்பணி செய்ததாக வரலாறு பதிவு செய்துள்ளது.

இவ்வாறு திருகோணமலை மாவட்டம் அடங்கிலும் இந்துக்களின் தமிழர்களின் பண்டைய இருப்பு, சிறப்பு, ஆளுமை, தொன்மை மிகு வரலாறு என்பன புதைந்து கிடக்கின்றன. இவை உரியபடி ஆய்வு செய்யப்பட்டு உலக வரலாற்றில் தெளிவாகப்பதிவு செய்யப்பட வேண்டும். உலகின் பண்டைய நாகரிகங்களின் மையப் பகுதிகளிளொன்றாக இந்துக்களின் பழம்பெரும் மாண்பின் வெளிப்பாடாக திருகோணமலை விளங்குகின்றது.

சிதைவடைந்த பண்டைய இந்துத் திருத்தலங்களை புனரமைத்துப் பாதுகாக்க வேண்டிய நாகரீக சிந்தனை நம்மவர் மத்தியிலே வெளிப்படாமை நம்நாடு இன்னும் நாகரீக சிந்தனை அற்ற பண்பாடற்ற நிலையிலிருந்து மீளவில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது. அதுவே யதார்த்த நிலை, உண்மைநிலை.




த.மனோகரன்
தினக்குரல்
12/04/2012
நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரேணுகா மில்

206, மத்திய வீதி, திருகோணமலை

077 1271245

40 ஆண்டுகால அனுபவமும் மக்களின்
நன்மதிப்பையும் பெற்ற
" ரேணுகாமில்"

- மிளகாய்த்தூள் வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
- இந்தியாவில் புகழ்பெற்ற மசாலா வகைகளும் இங்கே கிடைக்கும்.
- Panner, Udaya Krishna நெய் . பிரியாணி, Chicken, Garam மசாலா வகைகளும் இங்கே கிடைக்கும்.
- மிளகாய், மசாலா, கோப்பி வகைகள் அரைத்தும் கொடுக்கப்படும்.



நியூ உதயன் -திருமலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org